(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **151**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2017 மார்ச் 08, புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** நிதி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஹரின் பர்னாந்து,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ திலும் அமுனுகம**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ சிறிபால கமலத்**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ ஆறுமுகன் தொண்டமான்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ லொஹான் ரத்வத்தே**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ ரொசான் ரணசிங்க**

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்**: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்,—

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விமல் வீரவன்சவினால் 2017 பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி பாராளுமன்ற சபா கூடத்தில் அவர் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் 5பேரை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து எதிர்க்கட்சியில் சுயாதீனக் குழுவாக அங்கீகரிக்குமாறு எழுப்பிய வினா தொடர்பான எனது தீர்மானத்தை இந்த உயரிய சபைக்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

கௌரவ விமல் வீரவன்ச உட்பட 5 பேர் பாராளுமன்றத்தில் தேசிய சுதந்திர முன்னணியாக எதிர்க் கட்சியில் தனியான சுயாதீனக் குழுவாக அங்கீகரிக்குமாறும் குழுவின் தலைவராக கௌரவ விமல் வீரவன்சவிற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்கும், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 23(2) இன் கீழ் விசேட கூற்றுக்களை வெளியிடுவதற்கு அவருக்கு உள்ள உரிமையை அங்கீகரிக்குமாறும், 2016 மார்ச் மாதம் 09 ஆம் திகதி கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கு சமமானதொரு கூற்று 2016 ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி கௌரவ விமல் வீரவங்சவினால் இதே வினா தொடர்பில் இச்சபையில் எழுப்பப்பட்டது.

இதற்கு அமைவாக, அரசியலமைப்பிற்கு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக சட்ட ரீதியான அடிப்படையில் பாராளுமன்றத்தில் 2015 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தேர்தல் ஆணையாளரால் 2015 ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதிய 1928/2 ஐ கொண்ட அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் கூறப்பட்ட 6 அரசியல் கட்சிகள், அதாவது, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, இலங்கை தமிழரசுக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஈழ மக்கள் சனநாயக கட்சி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய ஆறு கட்சிகளுக்கு மேலதிகமாக, வேறு அரசியல் கட்சிகள் அல்லது அணிகளை பாராளுமன்றத்தில் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதே என்னால் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயமாக உள்ளது.

இப்பாராளுமன்றத்திலும் இதற்கு முந்திய பாராளுமன்றங்களிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுப்பினர்கள் தாம் போட்டியிட்ட கட்சியிலிருந்து பிரிந்து சுயாதீன உறுப்பினர்களாக எதிர்கட்சி வரிசையில் அமர்ந்து செயற்பட்ட பல சந்தர்ப்பங்கள் எமது வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது ஏற்புடைய உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் கிடைக்க வேண்டிய உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பாக பாராளுமன்றத்தில் கருத்து

சுதந்திரத்துக்கான உரிமையை சபாநாயகர் தலையிட்டு பெற்றுக் கொடுத்த பல சந்தர்ப்பங்களும் உண்டு. எதிர்கட்சியில் சுயாதீன உறுப்பினர்களாக அமர்ந்துள்ள அவ்வாறான உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக நிருவாக ரீதியாகவும் பல்வேறு செயற்பாடுகள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டன.

என்னாலும் எனக்கு முன்னர் இருந்த சபாநாயகர்களினாலும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இதை ஒத்த விடயங்களை அடிப்படையாக கொண்டு பல்வேறு தீர்மானங்கள் எட்டப்பட்டதென்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலில் கொழும்பு தேர்தல் மாவட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட கௌரவ விமல் வீரவன்ச பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 62 ஆம் பிரிவுக்கமைய தேர்தல் ஆணையாளரால் 2015 ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதிய 1928/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விமல் வீரவன்ச கடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அக்கட்சியின் ஓர் உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு தெரிவாகி உள்ளார் எனவும், அத்தேர்தலில் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட 06 அரசியல் கட்சிகளிலிருந்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும், தேர்தல் ஆணையாளர் 2015 ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதிய 1928/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனம் செய்துள்ளார்.

2015 செப்தெம்பர் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பமான தற்போதைய 8 ஆவது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சித் தலைவர்களாலும் தற்போதைய 8 ஆவது பாராளுமன்றத்தினுள் அங்கீகரிக்கப்பட்ட ஆறு அரசியல் கட்சிகள் மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கின்றன என்பதை ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளதாக பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் நிகழ்ச்சிக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மேலும் தேர்தல் ஆணையாளரின் கூற்றுப்படி 8 ஆவது பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட 6 ஆவது அரசியல் கட்சிகளுக்குள் உள்ளடங்கும் வேறு அரசியல் குழுக்கள் அல்லது கட்சிகள் எவை அல்லது அவர்களுக்கிடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகள் யாவை என்பதும் அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அல்லது நிபந்தனைகள் யாவை என்பதும் சபாநாயகர் என்ற வகையில் எனது கவனத்துக்கு உட்படமாட்டாது என்றும் அவ்வாறான உள்ளக கூட்டணி நிலைமைகளை அறிந்து கொள்ளல் அல்லது அது தொடர்பாக அறிந்திருத்தல் சபாநாயகர் என்ற வகையில் எனது பதவிக்கு உரித்தானதல்ல என்பதையும் இத்தால் குறிப்பிட விரும்புகின்றேன்.

பாராளுமன்றத்துக்குள் செய்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் எவை என்பது அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய சட்டரீதியான அடிப்படையல் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது என்று கருத்தாகும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99 ஆவது உறுப்புரையின் (13) ஆவது துணை உறுப்புரையின் (அ) பந்தியானது பாராளுமன்ற உறுப்பினரொருவருக்கும் அவர் தேர்தலுக்காக வேட்புமனு சமர்ப்பித்த அரசியல் கட்சிக்கும் அல்லது குழுவிற்கும் இடையிலான இணைத் தொடர்பினை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அத்தகைய பாராளுமன்ற உறுப்பினராக வந்த நேரத்தில் அவரது பெயர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேற்சைக் குழுவின் நியமனப்பத்திரத்தில் காணப்பட்டதோ அந்தக் கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து விலகுவதன் மூலம் அல்லது விலக்கப்படுவதன் மூலம் அல்லது

வேறு வகையில் அக்கட்சியின் அல்லது குழுவின் உறுப்பினராக இல்லாதொழியுமிடத்து, அவர் அத்தகைய உறுப்பினராக இல்லாதொழியும் தேதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் அவரது ஆசனம் வறிதாதல் வேண்டும் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் (13) வது துணை உறுப்புரையின் (அ) பந்தியின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளதென தெரிவிக்க விரும்புகின்றேன்.

- மேலும், அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் கீழ் அரசியலமைப்புப் பேரவையை இணைக்கும்போது 41 அ(1) உறுப்புரையின் (ஏ) உப பந்தியின் கீழ் பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரை பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு கட்சிகளும் தவிர்ந்த ஏனைய கட்சிகளின் பங்கேற்புடன் ஒரு உறுப்பினரின் பெயர் நியமனம் சமர்ப்பிக்கப்படுவதுடன், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகள் யாவையென்பதைப் பற்றி சட்டபூர்வமான அடிப்படையில் கவனம் செலுத்தாதுவிடின் அச்செயன்முறையில் பல நெருக்கடிகளை எதிர்நோக்குவதற்கு நேரிடும்.

நடைமுறையில் கருதும் போதுகூட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றிலிருந்து அல்லது குழுவிலிருந்து வேட்பு மனு தாக்கல் செய்து தேர்தலில் போட்டியிட்டு, பின்னர் சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானிக்கும் பாராளுமன்ற உறுப்பினரொருவர் அல்லது உறுப்பினர் குழுவொன்று தேர்தலில் வேட்பு மனு கையளித்து போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்று அலலது சுயாதீன குழுவொன்று கொண்டுள்ள உரிமைகள் அல்லது சிறப்புரிமைகளை வழங்குமாறு கோருமிடத்து, அதற்கு இடமளிப்பதன் மூலம் பாராளுமன்றத்தினுள் தனி உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகள், உறுப்பினர் குழுக்களைக் கொண்ட கட்சிகள் என்றவாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் புதிய கட்சிகள் அல்லது குழுக்கள் உருவாகி ஒட்டுமொத்த பாராளுமன்ற செயன்முறையும் வீழ்ச்சியடைவதற்கும் பாராளுமன்ற சிறப்புரிமைகளை தவறான விதத்தில் பயன்படுத்தவும் வாய்ப்பு உருவாகும்.

இதனை ஒத்த சந்தர்ப்பங்கள் இதற்கு முன்னர் தோன்றியுள்ள போது எனக்கு முன்னர் இருந்த சபாநாயகர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொடுப்பதற்கும், பாராளுமன்ற அலுவல்களை வினைத்திறனுடன் பேணிவருவதற்கு ஏற்புடையதான நடைமுறைச் சாத்தியமான தீர்மானங்களை மேற்கொண்ட பல சந்தர்ப்பங்களை கடந்த காலகட்டத்தில் காணக் கூடியதாக இருந்தன.

தற்காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் அணி எதிர்க்கட்சியில் அமர்வதற்கு முடிவு செய்த சந்தர்ப்பத்தில் எதிர்கட்சி ஆசனங்களை வழங்கி அவர்களுக்கு விவாதங்களில் கலந்துக் கொள்வதற்குத் தேவையான நேரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நான் தனிப்பட்ட முறையிலும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினுடாகவும் நடவடிக்கை எடுத்துள்ளேன்.

மேலும், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் இணக்கத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 23 (2) இன் கீழ் அவசரமானதும் பொது முக்கியத்துவம் வாய்ந்ததுமான விடயமொன்று பற்றிய வினா முடிவடைந்தவுடன் ஒரு கூற்றை முன்வைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தினேஷ் குணவர்தனவுக்கு இடமளிக்கப்பட்டது.

இதனை ஒத்த செயற்பாட்டை எனக்கு முன்பிருந்த சபாநாயகரும் கடைப்பிடித்துள்ளார். அவ்வாறு நடைமுறையில் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவின் இணக்ப்பாட்டுடன் சிற்சில உரிமைகள் வழங்கப்பட்ட போதிலும் அரசியல் அமைப்பின் பிரகாரமும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரமும் முழுமையாக சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற புதுக்கட்சியொன்றையோ அணியொன்றையோ பாராளுமன்றத்தில் தாபித்தல் சபாநாயகரான எனக்கும் பாராளுமன்றத்திற்கும் செய்ய முடியாததொன்றாகும்.

அதன்படி, சட்டரீதியாக பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட ஏற்புடைய வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் கட்சியொன்றையோ குழுவொன்றையோ மாத்திரமே என்பதையும், சந்தர்ப்பத்துக்கேற்றவாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது கருத்துக்களின் பிரகாரம் செயற்படுகையில் தமது விருப்பின்படி பிரதிநிதித்துவம் செய்ய எதிர்பார்க்கின்ற அணி அல்லது கட்சியையல்ல என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

எது எவ்வாறாயினும், பாராளுமன்ற உறுப்பினர் என்றவகையில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் பாராளுமன்றத்தில் உரித்தாகின்ற உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுக்கவும் அவ்வுரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதில் இடையீடுசெய்து செயலாற்றவும் நான் ஒருபோதுமே தயங்கமாட்டேன் என்பதையும் மேலும் அறிவிக்க விரும்புகிறேன்.

இந்த விடயம் தொடர்பாக பலதரப்பட்ட சந்தர்ப்பங்களில் சகல வகுதியினர்களிடமிருந்தும் கருத்துக்கள் வெளிவந்துள்ளதுடன், இந்தத் தீர்மத்தை எடுக்கும் போது அந்த எல்லா கருத்துக்கள் தொடர்பாக நான் கவனம் செலுத்தியுள்ளேன் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அதே வேளை, மேலும் இது தொடர்பாக அபிப்பிராயங்களைத் தெரிவித்தல் அல்லது விவாதங்களை மேற்கொள்ளல் எந்தவிதத்திலும் தேவையற்றது என நான் மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். ”

**2. பத்திரங்கள் சமர்ப்பணம் :** (1) விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் வருடாந்த செயல்திறன் அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனித வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிடெட்டின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வியாபாரம் மற்றும் வணிகம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான மக்கள் வங்கியின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்:** (1) பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ திலக் மாரப்பன, பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, ‘இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டமூலம்’ தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படிப் அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ லக்கி ஜயவர்தன, சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, “2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்” தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படிப் அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. மனுக்கள்:**

(1) (i) யட்டவத்த, பமுனுதெனிய, "சௌபாக்கியா" எனும் முகவரியில் வதியும் திருமதி எஸ்.எம்.எஸ்.கே. ஹதுகொடவினது 2016.11.28ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மாத்தளை, கொட்டுவேகெதர, ஏ குடியிருப்பு, இல. 11 இல் வதியும் திரு. எஸ்.ரீ. சில்வாவினது 2016.12.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ வசந்த அலுவிஹாரே சமர்ப்பித்தார்.

(2) (i) நுகேகொட, தேவால ஒழுங்கை, இல. 23/9 இல் வதியும் திரு. ஏ.எஸ்.எச்.ஜே. த அல்விஸினது 2017.01.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மத்தேகொட, வெத நிவஸ, இல. 121 இல் வதியும் திருமதி டாக்டர் டி. குணவர்தனவினது 2017.01.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மாத்தறை, பாலட்டுவ, "லக்மால்" இல் வதியும் திருமதி ஜீ.டப்ளியூ. கருணாவதீயினது 2017.02.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) பொல்கஸ்ஓவிட, கிரிகம்பமுணுவ, இல. 154 இல் வதியும் திரு. ஜே. சோமதாசவினது 2016.12.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(v) மாத்தறை, பொல்ஹேன, இரண்டாம் குறுக்குத் தெரு, இல. 9/3 இல் வதியும் திரு. யூ.எச். ஜயலத்தினது 2016.11.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி சமர்ப்பித்தார்.

(3) ஏலாளை, ஏலாளை மேற்கில் வதியும் திரு. எஸ் நாகராஸாவினது 2016.07.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மாவை சோ. சேனாதிராஜா சமர்ப்பித்தார்.

(4) தொடன்கொட, கங்இம, ஹர்மன்வத்த II, இல. 51 இல் வதியும் திரு. என்.கே.டி. அசங்கவினது 2016.10.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன சமர்ப்பித்தார்.

(5) இஹல கொட்டராமுல்ல, மொரகெலே, பள்ளி வீதி, திரு. யூ.ஐ. குயின்டஸ் பர்னாந்துவினது 2017.01.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஹெக்டர் அப்புஹாமி சமர்ப்பித்தார்.

(6) தம்பியாவ, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் வில்பத்துவ படையில் சேவை செய்யும் திரு. பீ.ஜீ.டி. தேசப்பிரியவினது 2016.12.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

அமர்வு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

பி.ப. 1.24 மணிக்கு

பி.ப. 1.41 மணியாகும் வரை அமர்வு இடைநிறுத்தப்பட்டது.

பி.ப. 1.41

அமர்வு மீள ஆரம்பிக்கப்பட்டதும் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

அமர்வு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

பி.ப. 2.06 மணிக்கு

பி.ப. 2.26 மணியாகும் வரை அமர்வு இடைநிறுத்தப்பட்டது.

பி.ப. 2.26 மணி

அமர்வு மீள ஆரம்பிக்கப்பட்டதும் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

பி.ப. 2.38

பி.ப. 3.14 மணியாகும் வரை அமர்வு இடைநிறுத்தப்பட்டது.

பி.ப. 3.14 மணி

அமர்வு மீள ஆரம்பிக்கப்பட்டதும் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

அவ்வேளை கௌரவ தினேஷ் குணவர்தன அக்கிராசனத்தின் கட்டளைக்கு கட்டுப்படாமையினால் சபாநாயகர் கௌரவ தினேஷ் குணவர்தனவின் பெயரை பெயர் குறிப்பிட்டார்.

"கௌரவ தினேஷ் குணவர்தன, பாராளுமன்ற சேவையிலிருந்து ஒரு வார காலத்திற்கு தடைசெய்யப்படுமாக" எனப் பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு, பின்வருமாறு பிரேரணைக்குச் சார்பாக 85; எதிராக 22 பேரும் வாக்களிப்பிலிருந்து தவிர்ந்து 3 பேரும் என வாக்களித்து பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

**சார்பாக**

கௌரவ ரணில் விக்கிரமசிங்க
கௌரவ வஜிர அபேவர்தன
கௌரவ மஹிந்த அமரவீர
கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம
கௌரவ கயந்த கருணாதிலக்க
கௌரவ ரவி கருணாநாயக்க
கௌரவ அகில விராஜ் காரியவசம்
கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல
கௌரவ தயாசிறி ஜயசேகர
கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா
கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார
கௌரவ அர்ஜுன ரணதுங்க
கௌரவ (கலாநிதி) விஜேயதாச ராஜபக்ஷ
கௌரவ மஹிந்த சமரசிங்க
கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா
கௌரவ டி.எம். சுவாமிநாதன்
கௌரவ ரஊப் ஹகீம்
கௌரவ அப்துல் ஹலீம்
கௌரவ கபீர் ஹசீம்
கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா
கௌரவ திலங்க சுமதிபால
கௌரவ செல்வம் அடைக்கலநாதன்
கௌரவ வசந்த அலுவிஹாரே
கௌரவ நிரோஷன் பெரேரா
கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே
கௌரவ ருவன் விஜேவர்தன
கௌரவ லக்ஷ்மன் செனெவிரத்ன
கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்
கௌரவ ஏ.எச்.எம். பௌஸி
கௌரவ பைஸால் காசிம்
கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன
கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா
கௌரவ கருணாரத்ன பரணவிதான
கௌரவ அஜித் பி. பெரேரா
கௌரவ தாராநாத் பஸ்நாயக்க
கௌரவ ரன்ஜன் ராமநாயக்க
கௌரவ ஹெக்டர் அப்புஹாமி
கௌரவ சிசிர குமார அபேசேகர
கௌரவ ஜே.சீ. அலவத்துவல
கௌரவ ஆனந்த அலுத்கமகே
கௌரவ வேலு குமார்
கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே
கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்
கௌரவ சந்திம கமகே
கௌரவ எட்வட் குணசேகர
கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன
கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன
கௌரவ லக்கி ஜயவர்தன
கௌரவ மயில்வாகனம் திலகராஜா
கௌரவ க. துரைரெட்ணசிங்கம்
கௌரவ எம்.எஸ். தௌபீக்
கௌரவ சிறினால் டி மெல்

கௌரவ முஹமட் நவவி
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ புத்திக பத்திறண
கௌரவ கே.கே. பியதாஸ
கௌரவ அசோக்க பிரியந்த
கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்
கௌரவ எஸ்.எம். மரிக்கார்
கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா
கௌரவ கே. காதர் மஸ்தான்
கௌரவ இம்ரான் மஹ்ரூப்
கௌரவ அஜித் மான்னப்பெரும
கௌரவ திலக் மாரபன
கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க
கௌரவ இஷாக் ரஹுமான்
கௌரவ முஜிபுர் ரஹுமான்
கௌரவ ஹர்ஷன ராஜகருணா
கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன
கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன
கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன
கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன
கௌரவ சமிந்த விஜேசிறி
கௌரவ ஹேஷான் விதானகே
கௌரவ ச. வியாழேந்திரன்
கௌரவ சி. சிறீதரன்
கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்
கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா
கௌரவ சந்தித் சமரசிங்க
கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்
கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்
கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி
கௌரவ எம்.ஏ. சுமந்திரன்
கௌரவ மாவை சோ. சேனாதிராசா
கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

**எதிராக**

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன
கௌரவ திளும் அமுணுகம
கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ
கௌரவ சிறிபால கமலத்
கௌரவ தினேஷ் குணவர்தன
கௌரவ பந்துல குணவர்தன
கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர
கௌரவ சிசிர ஜயகொடி
கௌரவ பியல் நிசாந்த த சில்வா
கௌரவ வீரகுமார திசாநாயக்க
கௌரவ சாலிந்த திசாநாயக்க
கௌரவ வாசுதேவ நாணாயக்கார
கௌரவ எஸ். பிரேமரத்ன
கௌரவ தாரக்க பாலசூரிய
கௌரவ பிரசன்ன ரணதுங்க
கௌரவ ரொசான் ரணசிங்க
கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல
கௌரவ ஜானக வக்கும்புர
கௌரவ விதுற விக்கிரமநாயக்க
கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம
கௌரவ தேனுக விதானகமகே
கௌரவ விமல் வீரவங்ச

**விலகிக்கொண்டோர்**

கௌரவ அநுர திசாநாயக்க
கௌரவ பிமல் ரத்நாயக்க
கௌரவ விஜித ஹேரத்

அவ்வேளை கௌரவ தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டதும் மீண்டும் பாராளுமன்றம் கூடியது.

**5. இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் தற்பொழுது இரண்டாவது தடவையாக மதிப்பீடு செய்யப்படுமாக" என பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(பி.ப. 3.55 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார். )

(பி.ப. 6.11 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார். )

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"விவாதம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் விவாதம் பிறிதொரு தினத்தில் நடைபெறும்.

**6. ஒத்திவைப்பு (படையினரின் வசமுள்ள காணிகளை அவற்றின் உரிமையாளர்களுக்கு விடுவித்தல்):** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் பி.ப. 7.22 மணிக்கு 2016 மார்ச் மாதம் 08 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப, 2017 மார்ச் மாதம் 09 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.